IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.44/2025

Deposition of Witness for P.W.2

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.காமராஜ் |
| FATHER NAME | - | சின்ன பையன் |
| VILLAGE | - | கீழ்கொத்தூர் |
| TALUK | - | அணைக்கட்டு |
| OCCUPATION | - | கோழி பண்ணை |
| AGE | - | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.01.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

முதல் விசாரணை-

நான் அணைக்கட்டு கீழ்கொத்தூரில் குடியிருக்கிறேன். கோழி பண்ணை வைத்துள்ளேன். எனக்கு பரமேஸ்வரி, மகாலிங்கம், சுந்தரேசன் ஆகியோர்களை தெரியும். மகாலிங்கத்தை கடத்திவிட்டதாக சுந்தரேசன் என்னிடம் சொன்னார். சுமார் 10 வருடத்திற்கு முன்பு 8ம் மாதம் 10 ஆம் தேதி மகாலிங்கத்தை கடத்தி ரூ.20,00,000/- பணம் கேட்டு மிரட்டியது தொடர்பாக பரமேஸ்வரி கொடுத்த புகாரின் பேரில் கசம் இரயில்வே கேட் அருகே போலீசார் இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயாரித்தார்கள். என்னுடன் சுந்தரேசனும் இருந்தார். நானும் சுந்தரேசனும் பார்வை மகசரில் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை-

பரமேஸ்வரி எனக்கு உறவினர் கிடையாது ஆனால் சித்தி என்று கூப்பிடுவேன். பார்வை மகசரிலுள்ள கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் செய்து கொடுத்தேன். பார்வை மகசரிலுள்ள கையெழுத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் கையெழுத்து செய்து கொடுத்தேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 19.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.19 19:27:01 +0600

Additional District Judge(FTC),
Vellore